**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.594/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | **சண்முகம், வயது 32** |
| Father Name/Husband Name | : | **மந்திரி** |
| Village | : | **சிவகாசி** |
| Taluk | : | **சிவகாசி** |
| Calling | : | **காவலர்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2025.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed.)**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2024 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நான், PC 5177 சபரி குமார், உதவி ஆய்வாளர் பொன்ராஜ் ஆகியோர் சகிதம் ரோந்து செய்து கண்காணித்து வந்த போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கோவில்பட்டி, தொழிற்பேட்டை உள்ளே காட்டுப் பகுதியில் சந்தேகத்துடன் நின்றுகொண்டிருந்த குவாலிஸ்ராஜ், வயது 50, வடக்கு திட்டங்குளம் என்பவர் கையில் 180ML அளவு கொண்ட ஒரு MC lenin மதுபாட்டில் வைத்துக் கொண்டிருந்தார். அவரை சோதனை செய்த போது அருகில் வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையை திறந்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட MC lenin பாட்டில்கள் 13 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். எதிரியின் வீட்டில் தேடி பார்த்தோம் எதுவும் கிடைக்கவில்லை. பின்பு எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பின்பு எதிரி மீது வழக்கு பதிவு செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 அத்தாட்சியில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யும்போது மணி 12.00 இருக்குமா என்றால் சரிதான். அதன் பின்பு

அத்தாட்சியில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தொழிற்பேட்டைக்கும், வடக்கு திட்டங்குளம் கிராமத்திற்கும் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது தொழிற்பேட்டை அருகே உள்ள காட்டு பகுதியில்தான் எதிரியை பார்த்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். வெள்ளை நிற சாக்கு பை மற்றும் மதுபாட்டில்களை புதருக்கு அருகில் இருந்துதான் எடுத்ததாக உதவி ஆய்வாளர் விசாரணையில் சொன்னீர்களா என்றால் சொன்னேன். எதிரியின் வீட்டின் அருகே வைத்து எந்தவித மதுபாட்டில்களும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான்.

4 நாங்கள் எதிரியை பார்க்கும்போது அவர் யாருக்கும் மதுபாட்டில்களை விற்று கொண்டிருக்கவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் எதிரி மது விற்றதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக பணிக்கு சென்றிருந்தால் அந்த விவரத்தை போலீஸ் நோட் புக்கில் எழுதியிருப்போம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பந்தமாக ரோந்து எதுவும் செல்லவில்லை என்பதால்தான் நோட்புக்கை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த பணியும் மேற்கொள்ளவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த மதுவகைகளும் கைப்பற்றபடவில்லை என்றாலும், எனது விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் பொன்ராஜ் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.